இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

டிஜிட்டல் பொருளாதார அமைச்சு

ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்

# விலைமனுக்கோரல் (IFB)

## தூய்மைப்படுத்தும் சேவைக்கான கொள்முதல்

## IFB No : DRP/ACC/07/20/2025

01. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரினால் 10ம் மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்லை தலைமை அலுவலகம் மற்றும் நுகேகொடயில் காணப்படும் "யமுனா" கட்டிடம் காப்பகத்திற்கும் **தூய்மைப்படுத்தும் சேவையை வழங்குவதற்கு** தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.

02. உத்தேசிக்கப்பட்ட சேவை காலம் **2025.08.01** ஆம் திகதி முதல் **2026.07.31** ஆம் திகதி வரையாகும்.

03. மனுகோரல்கள் தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும் (NCB)

04. ஆர்வமுள்ள மற்றும் தகுதியான மனுதாரர்கள் **வாரத்தில் வேலைநாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 மணி** வரையான காலப்பகுதியினுள் வேலை நாட்களில் **0115226172** மூலம் ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் கணக்காளரிடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் மேலும் மனு ஆவணங்களை நிதிப் பிரிவில், **"சி" பகுதி, 12 வது மாடி, ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம், சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்லையில்** எமது அதிகாரப்பூர்வ வலைத்தளம் **(www.drp.gov.lk)** மூலமாக **2025.05.26** முதல் **2025.06.11** வரையான காலப்பகுதியினுள் இலவசமாக பரிசீலனை செய்யலாம்.

05. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2025.05.26** ஆம் திகதியிலிருந்து **2025.06.11** ஆம் திகதி **மு.ப.09.00** மணியிலிருந்து **பி.ப.03.00** மணி வரையான காலப்பகுதியினுள் எழுத்து மூல விண்ணப்பத்தை **பத்தரமுல்லை, சுஹுருபாயவில் அமைந்துள்ள ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் "சி" பகுதி, 12 வது மாடியில் கணக்காளரிடம் மீள் செலுத்தப்படாத கட்டணமாக ரூ.3,500.00** மனுக் கட்டணத்தை பணமாகச் செலுத்துவதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

06. **2025.06.12** ஆம் திகதி **பி.ப.02.00** மணிக்கு முன் **"அசல்" மற்றும் "நகல்"** பிரதிகள் எனக் குறிப்பிடப்பட்ட இரண்டு பிரதிகளாக இருத்தல் வேண்டும், முத்திரையிடப்பட்ட மனுக்கள் வெவ்வேறான கடித உறைகளிடப்பட்டு அந்த கடித உறைகள் (அசல் மற்றும் பிரதி) தனி கடித உறையில் இடப்பட்டு, பந்தி 4ல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு மனு ஆவணங்களை அனுப்ப வேண்டும் அல்லது **கணக்கு கிளை, ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், "சி" பகுதி, 12 ஆம் மாடி, சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்லை** எனும் முகவரியில் மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இட வேண்டும். **மனுக்கள் கோரப்படும் திகதியில் இருந்து அல்லது நீட்டிக்கப்பட்ட திகதியிலிருந்து 77 நாட்கள் வரை (2025.06.12 - 2025.08.27) செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.** காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

07. மனுக்கள் அடங்கியுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் IFB இலக்கம் என்பவற்றை குறிப்பிட வேண்டும். அனைத்து மனுக்களும் இலங்கையில் செயல்படும் ஏதேனும் உரிமம் பெற்ற வணிக வங்கியினால் வழங்கப்பட்ட **ரூ.ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் (150,000.00)** மனுப் பாதுகாப்பு பிணையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆணைக்குழுவின் நாயகத்திற்கு ஆதரவாக எழுதப்பட்ட முதல் கோரிக்கையின் பேரில் வைப்புச்செய்யப்படல் வேண்டும். மனுப்பிணை **2025.06.13** ஆம் திகதி முதல் **2025.09.25** ஆம் திகதிவரை செல்லுபடியாகும். அல்லது DRP தினைக்களத்தின் சிராப்பரிடம் மீளப்பெறக்கூடிய பணத்தொகையை பெற்றுக்கொள்ள முடியும்.

08. தெரிவுசெய்யப்பட்ட மனுதாரர் **2025.08.01 ஆம்** திகதி முதல் சேவையைத் தொடங்க வேண்டும்.

09. முன்மனுக்கூட்டத்திற்காக குறித்த பகுதிக்கு தளப் பரிசீலனைக்கான வருகையினை மேற்கொள்ளுங்கள்.

**தலைவர்,**

**திணைக்களத்தின் பெறுகைக் குழு,**

**ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்,**

**12 ஆம் மாடி, "சுஹுருபாய", ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்லை.**

SELACINE